**கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 696 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதியான ரூபா 770,472 இனை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,050,000 பெறுமதியான RD 2134 டிராக்டர் இரண்டுமுறை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த காரணத்தினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் ரூபா 638,000 பெறுமதியான 49-9177 ஆம் இலக்க டிராக்டர் நிதிக்கூற்றுக்களில் ரூபா 65,000 எனக் காண்பிக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 573,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,387,028 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 6,349,495 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 முத்திரைக் கட்டணம்

2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்குரிய ரூபா 17,933,740 தொகையான நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் அதிகாரப் பிரதேசத்தினுள் ''துருலிய செவன'' மற்றும் ''ஜயபிம'' என்ற பெயரில் 02 விடுமுறைக் கேந்திரங்களை பேணிச்செல்லப்பட்டு வந்ததுடன் அவ்விரண்டு விடுமுறை கேந்திரங்களில் மீளாய்வாண்டினுள் ரூபா 586,170 கூட்டுத்தொகையான தேறிய நட்டமொன்று அடைந்திருந்ததுடன் நட்டம் சபை நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக இருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 770,472 பெறுமதியான 696 கல்வணய்ஸ் குழாய்களில் ரூபா 461,619 பெறுமதியான 417 கொடி கம்பங்கள் காணாமல் போயிருந்ததுடன், அது தொடர்பாக பரிசோதனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக காணப்படும் கணணி, உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையில் சேவை புரிந்து வருடக் கணக்கிற்கு முன்னர் மரணித்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச்சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஊழியர்கள் / 21 உத்தியோகத்தர்களிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 102,122 கூட்டுத்தொகையான பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

''2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் அடிப்படையொன்று இல்லாமல் காணப்படும் சொத்துக்கள்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 12,020,989 கூட்டுத்தொகையான சொத்துக்கள் பெறுமதி நாட்குறிப்பு பதிவு மூலம் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு சபை தீர்மானமொன்ற எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் உள்ளூராட்சி ஆணையாளரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்